# இரண்டாம் நிலைப் பாடசாலைகள் செப்டெம்பர் 2020 இல் மீண்டும் திறக்கும்போது எதை எதிர்பார்க்கலாம்

### *தரம் 9 முதல் 12 வரை*

COVID-19 ஏற்படுத்தும் சவால்களுக்குள்ளும், இணைந்து கல்விகற்கும் மற்றுமோர் வருடத்திற்கு உங்கள் வளரிளம்பருவப் பிள்ளையை வரவேற்பதற்கு நாங்கள் ஆவலுடன் இருக்கின்றோம். பாடசாலைக்கு மீண்டும் பாதுகாப்பாகத் திரும்புவதற்குத் தயாராகுவதில் உங்களுக்கு உதவுவதற்காக, 2020-21 பாடசாலை ஆண்டிற்குரிய மீளத் திறக்கும் எங்கள் திட்டங்களின் கண்ணோட்டம் ஒன்று இதோ.

மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெறும்: www.peelschools.org/reopening

## இசைவாக்கப்பட்ட மாதிரி: நேரில் கற்கும் முறையும் இணையக் கற்கை முறையும் கலந்தது

இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்கள், ஒவ்வொரு வகுப்பிலும் கிட்டத்தட்ட 15 மாணவர்களைக் கொண்ட பிரிவுகளாக (குழுக்கள்) நேரில் கற்கும் முறையும், வீட்டில் தொலைதூரக் கல்வி கற்கும் முறையும் கலந்த ஒரு இசைவாக்கப்பட்ட மாதிரியில் பாடசாலைக்கு மீண்டும் திரும்புவார்கள்.

## மற்றுமொரு தெரிவு: *PDSB இணையப் பாடசாலை* ஊடாக வீட்டிலிருந்து கல்வி கற்றல்

2020-21 பாடசாலை ஆண்டில் நேரில் பாடசாலைக்குச் சமூகமளிப்பது சொந்த விருப்பத்திற்குரியது. தங்கள் பிள்ளையை நேரில் கற்பதற்காக பாடசாலைக்கு அனுப்புவதில்லையெனக் குடும்பத்தினர் தெரிவுசெய்தால், அதற்குப் பதிலாக அவர்கள் வீட்டிலிருந்து தொலைதூரக் கற்கை ஊடாக மட்டும் கல்வி கற்கலாம். இந்த மாணவர்கள் எங்களுடைய புதிய *PDSB இணையப் பாடசாலையில்* சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

நேரடியான, இணைய அனுபவங்கள் மற்றும் மாணவர்கள் வீட்டிலிருந்து செய்யும் தொடர் செயற்பாடுகள் ஊடாக ஒன்ராறியோ பாடத்திட்டத்தை *PDSB இணையப் பாடசாலை* முழுமையாக வழங்கும். பீல் பாடசாலைச் சபையின் கல்வி பயிற்றுநர்களால் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்படும், ஆனால் உங்கள் வளரிளம்பருவப் பிள்ளையின் பாடசாலையிலுள்ள பயிற்றுநர்களாக அவர்கள் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

இரண்டாம் நிலைப் பாடசாலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இணையத்தில் பாடங்கள் கிடைக்கப்பெறும். கல்வியைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான முக்கிய பாடங்களிலும் மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்குப் பின்னரான கல்விக்குத் தேவையான கட்டாய பாடங்களிலும் *PDSB இணையப்* பாடசாலை கவனம் செலுத்தும்.

### கற்கை மாதிரிகளுக்கிடையில் மாறுதல் (புதுப்பிக்கப்பட்டது)

இரண்டாம் நிலை மாணவர்கள், பாடசாலை ஆரம்பமாகி முதல் வார இறுதிவரை **தொலைதூரக் கற்கையிலிருந்து இசைவாக்கப்பட்ட கற்கை மாதிரிக்கு** மாறமுடியும். அதன் பின்னர், முழுமையான தொலைதூரக் கற்கையை மாணவர்கள் தெரிவுசெய்திருந்தால், அந்தத் தவணைக் காலம் முடியும்வரை அவர்கள் *PDSB இணையப் பாடசாலையில்* தொடர்ந்து இருப்பார்கள் (எங்களுடைய நான்கு தவணை மாதிரி பற்றி மேலும் அறிவதற்கு அடுத்த பக்கத்தைப் பார்வையிடவும்),

மாணவர்கள் தெரிவுசெய்த **நேரில் கற்கும் முறையிலிருந்து பின்னர் *PDSB இணையப் பாடசாலைக்கு* மாறுவதற்கு விரும்பினால்** அந்தப் பாடநெறி இணையத்தில் வழங்கப்படுகிறது என்றால் மட்டுமே, அவர்களால் அப்படிச் செய்யமுடியும். இந்த நிலைமாற்றத்தில் குடும்பத்தினருக்கு உதவும்பொருட்டு மாணவர்களுடன் இணைந்து பாடசாலை செயற்படும்.

## புதிய இசைவாக்கப்பட்ட மாதிரியைப் புரிந்துகொள்தல்:

## நேரில் கற்கும் முறையும் தொலைதூரக் கற்கை முறையும் கலந்தது

### பாடசாலை அட்டவணைகளும் குழுக்களும்

பாடசாலை ஆண்டு நான்கு தவணைகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு தவணையிலும், மாணவர்கள் கிட்டத்தட்ட 10 வாரங்களுக்கு இரண்டு பாடநெறிகளில் கவனம் செலுத்துவார்கள்.

மாணவர்களுக்கிடையே ஊடாட்டத்தை மட்டுப்படுத்த உதவுவதற்காக, ஒவ்வொரு குழுவும் ஒரு சுழற்சி அட்டவணையில் நேரடியாக வகுப்புக்குச் சமூகமளிக்கும் குழு A அல்லது B என மாணவர்கள் ஒதுக்கப்படுவார்கள். குழு A இல் உள்ள மாணவர்கள் ஒரு வாரத்திற்கு திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளிலும் அடுத்த வாரம் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளிலும் நேரடியாகப் பாடசாலைக்குச் சமூகமளிப்பார்கள் (வரைபடத்தைப் பார்க்கவும்).

*இரண்டாம் நிலை மாணவர்கள் நேரடியாகச் சமூகமளிக்கும் அட்டவணை*

*இந்த வரைபடம் குழு A மற்றும் B எந்த நாட்களில் நேரடியாகப் பாடசாலைக்குச் சமூகமளிப்பார்கள் எனவும் அன்றைய தினம் எந்தப் பாடநெறி கற்பிக்கப்படும் எனவும் காட்டுகிறது.*

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| கிழமை 1 | குழு A<br>1வது வகுப்பு | குழு A<br>2 வது வகுப்பு | குழு A<br>1 வது வகுப்பு | குழு B<br>1 வது வகுப்பு | குழு B<br>2 வது வகுப்பு |
| கிழமை 2 | குழு A<br>1 வது வகுப்பு | குழு A<br>2 வது வகுப்பு | குழு B<br>1 வது வகுப்பு | குழு B<br>1 வது வகுப்பு | குழு B<br>2 வது வகுப்பு |
| கிழமை 3 | குழு A<br>1 வது வகுப்பு | குழு A<br>2 வது வகுப்பு | குழு A<br>2 வது வகுப்பு | குழு B<br>1 வது வகுப்பு | குழு B<br>2 வது வகுப்பு |
| கிழமை 4 | குழு A<br>1 வது வகுப்பு | குழு A<br>2 வது வகுப்பு | குழு B<br>2 வது வகுப்பு | குழு B<br>1 வது வகுப்பு | குழு B<br>2 வது வகுப்பு |

*குறிப்பு:* ஒரு நாளில் 5-பாடநேரங்களுக்கு மாணவர்கள் சமூகமளிக்கும் ஒரு பாடசாலையில் (பீல் வட்டாரப் பாடசாலைச் சபையில் ஒரு சில மட்டுமே உள்ளன) மேலுள்ளதைவிட சற்று வித்தியாசமான ஒரு அட்டவணை இருக்கும். இந்தப் பாடசாலைகள் தமது அட்டவணைகளைக் குடும்பத்தினருடன் நேரடியாகப் பகிர்ந்துகொள்ளும்.

## பாடசாலை ஆரம்பமாகும் நேரங்கள் அதேபோல் இருக்கும் (அநேகமான சந்தர்ப்பங்களில்)

பாடசாலையில் அன்று இருப்பதாக அட்டவணைப்படுத்தப்பட்ட மாணவர்கள் 150 நிமிடங்கள் நேரில் கற்பதற்கு வருவார்கள், அதன் பின்னர் இணையத்தில் கற்கையைத் தொடர்வதற்காக வீட்டுக்குத் திரும்புவார்கள். மாணவர்கள் பாடசாலையில் இருப்பதாக அட்டவணைப்படுத்தப்பட்டிருக்காவிட்டால், அவர்கள் பாடசாலை நேரத்தில் வீட்டிலிருந்து தொலைதூரக் கற்கையில் பங்குபற்றுமாறு வேண்டப்படுவர்.

நேரில் கற்பதற்காக பாடசாலையில் இருப்பதாக அட்டவணைப்படுத்தப்பட்ட *குழு A* இல் இருக்கும் ஒரு மாணவரின் நாளாந்த மாதிரி நேர அட்டவணை. பாடசாலை ஆரம்பமாகும் நேரங்கள் மாறுபடும்.

| மாதிரி நேரம் | | |
|---|---|---|
| காலை 8:30 - 11:00 (150 நிமி.) | **குழு A** பாடசாலையில் | **குழு B** தொலைதூரக் கற்கை (வீட்டில்) |
| காலை 11:00 | மாணவர் பாடசாலையிலிருந்து விடுபடல் – தொலைதூரக் கற்கையைத் தொடர்வதற்காக குழு A வீட்டுக்குத் திரும்புதல் | |
| காலை 11 – பி.ப. 12: 00 | ஆசிரியர் மதிய உணவு | |
| பி.ப.12:00 - 1:15 p.m. (75 நிமி.) | **குழு A மற்றும் B** தொலைதூரக் கற்கைக்கு (வீட்டில்) ஆதரவும் சுயாதீனமான கற்கையும் | |
| பி.ப 1:15 - 2:30 (75 நிமி.) | **குழு A மற்றும் B** வகுப்பு ஆசிரியருடன் நிகழ்-நேர தொலைதூரக் கற்கை (வீட்டில்) | |

# மேம்படுத்தப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

## பரிசோதனைக்கு உட்படுத்தப்படல் மற்றும் வீட்டில் இருப்பது எப்போது

ஒரு பரிபூரணமான வருகைப் பதிவைவிட ஒரு பாதுகாப்பான பாடசாலை எப்போதும் முக்கியமானது.

பஸ்தரிப்பு மற்றும் பாடசாலைக்கு வருவதற்கு முன்னர் குடும்பத்தினர் தமது வளரிளம்பருவப் பிள்ளைகளை தினசரி பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு இந்தச் சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்தவேண்டும். உங்களுடைய வளரிளம்பருவப் பிள்ளைக்கு ஏதாவது நோய்க்குறிகள் இருந்தால், தயவுசெய்து அவர்களை வீட்டில் வைத்திருந்து தேவைப்படும் மருத்துவக் கவனிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். பாடசாலையில் இருக்கும்போது மாணவர்களுக்கு COVID-19 அறிகுறிகள் தென்பட்டால், வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படும் வரை காத்திருப்பதற்காக அவர்கள் குறிப்பிட்ட தனிமைப்படுத்தல் அறைக்கு அனுப்பப்படுவர். அந்த சரிபார்ப்புப் பட்டியலைப் பார்வையிடுங்கள்: https://covid-19.ontario.ca/self-assessment/

## முகக் கவசம் மற்றும்/அல்லது முக மறைப்பு தேவைப்படுகிறது

கல்வி அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டவாறு, தரம் 1 முதல் 12 வரையிலுள்ள மாணவர்கள் பாடசாலைச் சபையினால் வழங்கப்படும் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போதும் (உ+ம்.,

பேருந்துகள்) பாடசாலைக்கு உள்ளே இருக்கும்போதும் (உ+ம்., வகுப்பு நேரத்திலும் விறாந்தைகளிலும்) முகக்கவசங்கள் மற்றும்/அல்லது முக மறைப்புகளைப் பயன்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர். நியாயபூர்வமான விதிவிலக்குகள் கொடுக்கப்படும். [ஒன்ராறியோ அரசாங்கத்தின் இந்த வழிகாட்டல்களை]() இணைந்து பார்வையிடுவதன் மூலம் முகக் கவசம் ஒன்றை உங்கள் வளரிளம்பருவப் பிள்ளை அணியப் பழகிக்கொள்வதற்கு உதவுங்கள்.

உங்களுக்குக் கரிசனைகள் இருந்தால், தயவுசெய்து உங்களுடைய பாடசாலை அதிபருடன் கதையுங்கள்.

## கைச் சுகாதாரத்தைப் பேணுங்கள்

பாடசாலை நுழைவாயிலிலும் ஒவ்வொரு வகுப்பறையிலும் கைச்சுத்திகரிப்பான் வைக்கப்படும். மாணவர்கள் மற்றும் பணிபுரிவோர் பாடசாலைக் கட்டிடம் மற்றும் வகுப்பறைக்குள் நுழையும்போதும், உணவருந்த முன்னரும் பின்னரும், கழிவறையைப் பயன்படுத்திய பின்னரும், அத்துடன் ஏனைய நேரங்களிலுமாக நாள் முழுவதும் கைகளைக் கிருமியழிப்பு செய்யுமாறு வேண்டப்படுவர். அனைத்து வகுப்புகளுக்கும் அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவறைக்கான மற்றும் கைகளைக் கிருமியழிப்பு செய்வதற்கான இடைநேரங்கள் இருக்கும்.

## ஏனையவர்களிடமிருந்து ஒரு பாதுகாப்பான தூரத்தைப் பேணுங்கள்

மாணவர்களுக்கிடையிலும் ஏனைய குழுக்கள்/வகுப்புகளுக்கிடையிலும் இயன்றளவு இடைவெளியை ஊக்குவிப்பதற்காக புதிய பாடசாலை நடைமுறைகள் அமுலில் இருக்கும்.

விறாந்தைகளில் ஒரு வழிப்பாதைகள், குழுவாக்கல், மாற்றங்கள் செய்யப்பட்ட விட்டு விடும்/திருப்பி எடுக்கும் (drop-off/pick-up) நடைமுறைகள், மூடப்பட்ட பகிரப்படும் இடங்கள் (நூலகங்கள், கேட்போர் கூடங்கள், சிற்றுண்டிச்சாலைகள், மற்றும் உடைமாற்றும் அறைகள் போன்றவை), இருக்கை ஒழுங்குகள், பாடசாலையில் வகுப்பு மாறுதல்களை ஒருங்கிணைத்தல், மற்றும் பலவற்றை இது உள்ளடக்கும். ஏனையோருடனான தொடர்பை மட்டுப்படுத்தும்பொருட்டு, சுகாதாரம் மற்றும் உடற்கல்வி தவிர, ஏனைய பாடங்கள் அனைத்திற்கும் மாணவர்கள் தமது வகுப்பறைக்குள்ளேயே இருப்பார்கள்.

## மேம்படுத்தப்பட்ட துப்புரவாக்கல் மற்றும் தொற்று நீக்கல் நடைமுறைகள்

பொதுச் சுகாதார முகவர்கள் மற்றும் கல்வி அமைச்சின் வழிகாட்டலின் அடிப்படையில் பாடசாலை நடைமுறைகளது அனைத்து அம்சங்களுக்கும் புதிய மேம்படுத்தப்பட்ட சுகாதார பாதுகாப்பு முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புகள் உள்ளடங்கலாக பாடசாலை முழுவதுமான தினசரித் தொற்று நீக்கலுக்கு மருத்துவமனை தரத் தொற்று நீக்கிகளைத் துப்புரவாக்கல் பணியாளர்கள் பயன்படுத்துவார்கள். வெவ்வேறு குழுக்களால் பகிரப்படும் இடங்கள் பாவனைக்கு முன்னரும் பின்னரும் துப்புரவு செய்யப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்படும்.

## புதிய பேருந்து நடைமுறைகள்

பாடசாலைப் பேருந்தில், வகுப்பறைக் குழுக்கள் மற்றும் ஒரே வீட்டிலிருக்கும் உடன் பிறப்புகள் என்ற ஒழுங்கில் மாணவர்களுக்கு இருக்கைகள் ஒதுக்கப்படும். அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புகள் பேருந்துப் பயண ஓட்டங்களுக்கிடையில் சாரதியினால் துப்பரவு செய்யப்படும். தரம்

1 முதல் 12 வரையிலுள்ள மாணவர்களுக்கு முகக் கவசங்கள் மற்றும்/அல்லது முக மறைப்புகள் தேவைப்படும். நியாயபூர்வமான விதிவிலக்குகள் கொடுக்கப்படும்.

உங்களுடைய பிள்ளை பாடசாலைச் சபையினால் வழங்கப்படும் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தமாட்டார் என்றால், தயவுசெய்து இந்த பீல் பிராந்தியப் போக்குவரத்து வசதியிலிருந்து விலகும் படிவத்தைப் பூர்திசெய்யுங்கள்.

## விசேட கல்வி

வீட்டிலிருந்து கற்க முடியாத, கூடிய அளவு விசேட கல்வி தேவைப்படும் இரண்டாம் நிலை மாணவர்களுக்குத் தினசரி சமூகமளிப்பதற்கும் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கும் அனுமதி வழங்கப்படும். தனித்தனி கல்வித் திட்டங்களுக்கான ஆதரவு நேரில் மற்றும் வீட்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படும். எங்களுடைய விசேட கல்வி வகுப்புகளிலுள்ள மாணவர்கள் தொடர்பான திட்டங்கள் என்பதைப் பார்வையிடுங்கள்.

## மனநல மற்றும் சமூக ஆதரவுகள்

சவால் நிறைந்த இந்த நேரத்தில், மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மனநல மற்றும் நல்வாழ்வுக்கான ஆதரவுகள் மற்றும் வளங்களுடன் மனநலம், உணவு, வதிவிடத் தேவைகளுக்கான சமூக ஆதரவுகளின் ஒரு விரிவான பட்டியலும் பீல் பாடசாலைச் சபையிடம் இருக்கின்றது.

## அண்மித்த தகவல்களை அறிந்திருங்கள்

இந்தப் பாடசாலைச் சபையின் 2020-21 ஆண்டிற்கான மீளத் திறக்கும் திட்டங்கள் பற்றி மேலும் அறிவதற்கு, பார்வையிடுங்கள்: www.peelschools.org/reopening. புதிய தகவல்கள் கிடைக்கப்பெறும்போது இந்த இணையப் பக்கம் புதுப்பிக்கப்படும்.

## வரைவிலக்கணங்கள்:

**குழுக்கள்:** குழுவாக்கல் என்பது பல ஆசிரியர்கள் அல்லது பல்வகையான வகுப்பு மாணவர்களுடன் வெளிப்படுத்தப்படலை மட்டுப்படுத்தி மாணவர்களை ஒரு சிறிய பிரிவாக அவர்களுடைய பாடசாலை நேரம் முழுவதும் வைத்திருக்கும் நடைமுறையாகும். ஒரு தனி மாணவர் தொடர்பு வைத்திருக்கும் ஏனைய மாணவர்களின் எண்ணிக்கையை இந்த நடைமுறை மட்டுப்படுத்துகின்றது.

**தொலைதூரக் கல்வி கற்றல்:** தொலைதூரக் கல்வி கற்றல் முறையில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்கள் பீல் பாடசாலைச் சபை கல்விபயிற்றுநர் ஒருவரால் வழங்கப்படும் இணைய அறிவுறுத்தல் ஊடாக வீட்டிலிருந்து கல்வி பயில்வார்கள். இது நேரடியாக, நிகழ் நேரத்தில் கல்வி கற்கும் முறை மற்றும் அவர்கள் வீட்டில் செய்யும் தொடர் செயற்பாடுகள் ஆகியவற்றின் கலப்பு ஒன்றை உள்ளடக்குகின்றது.

**நான்கு தவணை:** இரண்டாம் நிலைப் பாடசாலை ஆண்டு நான்கு தவணைகள் என அழைக்கப்படும் நான்கு காலப் பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு தவணையும் கிட்டத்தட்ட 10 வாரங்கள் வரை நீடிக்கும். ஒவ்வொரு மாணவரும் ஒரு தவணைக் காலத்தில் இரண்டு பாடநெறிகளில் கவனம் செலுத்துவர்.